## நாங்கள் யார்

சிறுவர்களும் இளைஞர்களும் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பிலிருந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒன்ராறியோ அரசாங்கத்தினால் பணிக்கப்பட்ட ஒரு முகவர் நிலையம் தான் நாம்.

## நாம் என்ன செய்கின்றோம்

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு பற்றிய அறிக்கைகளை நாங்கள் விசாரிக்கிறோம், தங்கள் சிறுவர்களைப் பாதுகாப்பாகக் கவனித்துக்கொள்வதற்கு ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்குரிய சேவைகளை வழங்குகிறோம், மேலும் பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் தங்க முடியாதபோது உறவினர்களுடன் அல்லது ஏஜென்சியின் உரிமம் பெற்ற பராமரிப்பு வழங்குநர்களுடன் வாழ ஏற்பாடு செய்கிறோம். எங்கள் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் 6,500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுடன் செயல்படுகிறது. நாங்கள் கவனிக்கும் 96% கரிசனைகளில், பிள்ளைகள் தங்கள் சொந்த வீட்டிலேயே தங்கியுள்ளனர். ஏஜென்சி அடிப்படையிலான பராமரிப்பாளரின் வீட்டில் வைக்கப்பட்டவர்களை விட அவர்களுக்குத் தெரிந்த நபர்களால் ஆதரிக்கப்படும் பிள்ளைகள் நீண்ட காலத்திற்குச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஒரு பிள்ளையின் உரிமைகள் குறித்த ஐ.நா பிரகடனத்தை நாங்கள் கடைப்பிடிக்கிறோம்.

## எங்களுடன் எப்படி இணைந்து கொள்ளலாம்:

ஆபத்தில் உள்ள ஒரு பிள்ளையைப் பற்றி உங்களுக்குக் கேள்விகள் அல்லது கரிசனைகள் இருந்தால், நாங்கள் 24 மணிநேரமும், வாரத்தில் 7 நாட்களும் உதவத் தயாராக இருக்கிறோம்.

தொலைபேசி: 1-800-461-4236

familyconnexions.ca

துண்டுப்பிரசுரம் முதலில் Simcoe Muskoka Family Connexionsஆல் உருவாக்கப்பட்டது மற்றும் வடிவமைக்கப்பட்டது - அனுமதியுடன் அச்சிடப்பட்டது

## எங்களை எங்கே கண்டுபிடிக்கலாம்:

Barrie
60 Bell Farm Road, Unit 7, L4M 5G6
(705) 726-6587 அல்லது 1-800-461-4236

Bracebridg
193 Manitoba Street, Unit 5, P1L 1S3
(705) 645-4426

Collingwood
186 Hurontario Street, Unit 105, L9Y 4T4 (705) 444-9160

Huntsvill
81 Main Street West, P1H 1X1
(705) 789-8866

Midland
741 Yonge Street, Units 7 & 8, L4R 2E1
(705) 526-9341

Orillia
250 West Street N, Unit 3, L3V 5C9
(705) 325-1005 அல்லது 1-800-422-9970

பணியாளரின் பெயர்: ______________
தொலைபேசி எண்:________________
மின்னஞ்சல்:______________________
ஏனைய குறிப்புகள்:

/SMFConnexions @SMFConnexions
SMFConnexions

Simcoe Muskoka
**Family Connexions**
**Connexions Familiales**
de Simcoe Muskoka

# நாம் யார், என்ன செய்கின்றோம்: புதிய குடிவரவாளர்களுக்கான வழிகாட்டி

உங்களுக்கு ஏதாவது கரிசனை இருந்தால், அதைக் கேட்டு அதற்குத் தீர்வு காண்பதற்கு உதவ நாங்கள் இங்கே இருக்கிறோம்.

## எங்கள் விழுமியங்கள்

கூட்டாண்மை
மரியாதை
பொறுப்புக்கூறல்
சமத்துவம்

## பிள்ளைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாப்பாகவும் நன்றாகவும் வைத்திருப்பதில், பெற்றோர்கள்/குடும்பங்களை ஆதரிப்பதில் எங்கள் ஈடுபாட்டிற்கான காரணங்கள்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், எங்கள் நிறுவனம், பிள்ளை மற்றும்/அல்லது இளைஞர் ஒருவரின் உணர்ச்சி மற்றும்/அல்லது அடிப்படை உடல் தேவைகளைப் (உ+மாக. உணவு, தங்குமிடம், ஆடை போன்றவை) பூர்த்தி செய்வதற்கான குடும்பத்தின் திறனைப் பற்றி அக்கறை கொண்டுள்ள, சமூக உறுப்பினர்கள் அல்லது உள்ளூர் நிபுணர்களால் அழைக்கப்படுகிறது (உ+மாக. ஆசிரியர்கள், பொது சுகாதாரப் பணியாளர்கள், போலீஸ் அதிகாரிகள் போன்றவர்கள்).

கிடைக்கப்பெற்ற ஆராய்ச்சி முடிவின்படி, "ஒன்ராறியோவில் சிறுவர் உதவிச் சங்கங்களிலிருந்து சேவைகளைப் பெறும் பிள்ளைகளில் 89% பேர் அவ்வாறு செய்கின்றனர், ஏனெனில் அவர்களின் குடும்பங்கள் தமது பிள்ளைகளின் உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். ஒரு பிள்ளையின் உடல், உணர்ச்சி மற்றும் சமூகத் தேவைகளைத் தொடர்ச்சியான அடிப்படையில் பூர்த்தி செய்யாததன் தாக்கம் பேரழிவுகரமானதாக இருக்கலாம் மற்றும் பிற்காலத்தில் கடுமையான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என (Ontario Association of Children's Aid Society - OACAS) ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

## பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான பிள்ளை/இளைஞர் ஒருவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை, ஏன் சில குடும்பங்கள் சவாலாக உணர்கின்றன:

நாங்கள் உதவி வழங்கும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள், ஏற்கனவே பெற்றோருக்கு இருக்கும் பிரச்சினைகளை மேலும் சவாலானதாக மாற்றக்கூடிய, பிரச்சினைகளுடன் போராடும் குடும்பங்களின் ஒரு பகுதியாகும். இந்தச் சிரமங்களில் சில மனநலப் போராட்டங்கள், அடிமைத்தனங்கள், சமூக தனிமைப்படுத்தல், அதிர்ச்சி மற்றும் தீவிர நிதி அழுத்தம் ஆகியவை அடங்கும்.



"மாகாணம் முழுவதும் உள்ள சிறுவர் நலன்புரி சங்கங்கள் தலையிடும் ஐம்பத்தி மூன்று (53%) குடும்பங்கள் மேற்கூறிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கஷ்டங்களை அனுபவித்துள்ளன" OACAS.

இந்தச் சிரமங்கள் பெரும்பாலும் மக்களின் சேவைகளுக்கான அணுகல் இல்லாமை, வாழக்கூடிய ஊதியம் மற்றும் பல்வேறு நெருக்கடிகளுக்குத் தீவிரமாகப் பங்களிக்கக்கூடிய முக்கிய சமூக வளங்களால் ஏற்படுகின்றன (உ+மாக. உணவுப் பற்றாக்குறையுடன் கட்டுப்படியாகும் சிறுவர் பராமரிப்பு, மருத்துவ சேவைகள், சுகாதாரப் பராமரிப்பு, போதிய வீட்டுவசதி ஆகியன கிட்டாது போதல் போன்றவை).

இத்தகைய நெருக்கடிகள் அனைத்துப் பின்னணிகளிலும் இருக்கும் பெற்றோர் மற்றும் குடும்பங்களைப் பாதிக்கலாம் மற்றும் ஆதரவுக்காக எங்கள் நிறுவனத்தின் தலையீட்டிற்கு வழிவகுக்கும்.

## பிள்ளை/இளைஞர் ஒருவரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு பற்றிய அக்கறையுடன் பொதுமக்களிடமிருந்து ஒருவரால் நாம் அழைக்கப்பட்டால் என்ன நடக்கும்?

சமூகத்தில் உள்ள ஒருவரால் ஏஜென்சி அழைக்கப்படும்போது, அந்தப் பிள்ளை/இளைஞருக்குத் தீங்கு விளைவிக்கப்பட்டதா அல்லது தீங்கு விளைவிக்கும் அபாயத்தில் அவர் உள்ளாரா என்பதைத் தீர்மானிக்க அந்தக் கரிசனைகள் பற்றிய விசாரணை உதவும். பிள்ளை/இளைஞர் ஒருவரின் பாதுகாப்பு கரிசனைக்குரியதாகக் கருதப்பட்டால், அந்தப் பிள்ளை/இளைஞரைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான சிறந்த வழியைத் தீர்மானிக்க நாங்கள் குடும்பத்துடன் இணைந்து பணியாற்றுவோம், இதில் குடும்பத்திற்கான ஆதரவுச் சேவைகளும் அடங்கும்.

## பிள்ளைகள் பாதுகாப்பாகவும் நன்றாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காகக் குடும்பங்கள் மற்றும் அவர்களின் சமூகத்துடன் இணைந்து நாங்கள் பணியாற்றுகின்றோம்

சிறுவர் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பது பகிரப்படும் ஒரு சமூகப் பொறுப்பாகும். பிள்ளைகளுக்கும் குடும்பங்களுக்கும் தேவையான சேவைகளை வழங்குவதற்கு, வயது வந்தோர் மற்றும் பிள்ளைகளுக்கான மனநல சேவைகள், அடிமைத்தன ஒழிப்பு நிலையங்கள், வேலைவாய்ப்பு நிலையங்கள், பெண்கள் தங்குமிடங்கள், சிறுவர் பராமரிப்பகங்கள், சமூக நிலையங்கள், ஆலோசனைச் சேவைகள், வீட்டுவசதிக்கு உதவும் ஊழியர்கள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற பங்காளர்களுடன் இணைந்து நாங்கள் ஒத்துழைக்கிறோம்.

சமூக சேவைகள் தீர்வின் ஒரு முக்கிய பகுதியாக இருந்தாலும், குடும்பங்கள், குடும்பத்தின் தூரத்து உறுப்பினர்கள் மற்றும் ஆதரவான சமூகங்களிலிருந்து வரும் அன்பையும் வளர்ப்பையும் ஒருபோதும் மாற்ற முடியாது என்பதை நாங்கள் அறிவோம்.

## உங்கள் உரிமைகள்

நாங்கள் உங்கள் குடும்பத்துடன் சம்பந்தப்பட்டால்:

- எங்கள் தலையீட்டிற்கான காரணத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது. நீங்கள் நன்கு புரிந்துகொள்ளும் மொழியில் தகவல்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரும் உரிமையும் இதில் அடங்கும்.
- நீங்கள் பெறும் சேவைகள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாதபோது, அல்லது நாங்கள் எடுக்கும் முடிவுகளுடன் நீங்கள் உடன்படாதபோது எங்களுடன் பேச உங்களுக்கு உரிமை உள்ளது. உங்கள் கரிசனைகளை நாங்கள் தீர்க்காவிட்டால், வெளிப்புற முறையீட்டுச் செயல்முறைக்குச் செல்ல உங்களுக்கு உரிமை உள்ளது.
- ஒரு நீதிபதியை முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதற்காக, நீதிமன்றத்திற்கு உரிய தகவல்களை வழங்க வேண்டிய சூழ்நிலைகள் எமக்கு உள்ளன. அப்படி நடந்தால், ஒரு வழக்கறிஞரின் உதவியுடன் உங்கள் தகவல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உங்களுக்கு உரிமை உண்டு.
- உங்கள் கோப்பில் வைக்கப்பட்டுள்ள தகவல்களை அறிய உங்களுக்கு உரிமை உள்ளது மற்றும் உங்கள் கோப்பிலுள்ள தகவல்களின் பிரதியைக் கோரலாம்.

உங்கள் உரிமைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி மேலும் அறியத், தயவுசெய்து உங்கள் பணியாளரிடம் கேளுங்கள் அல்லது எங்களைத் தொடர்பு கொள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் (நீங்கள் கீழே உள்ள QR குறியீட்டையும் ஸ்கேன் செய்யலாம்).